**<u>முதல் கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்</u>**

முன்னிலை:- திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் அமர்வு நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 24 ம்நாள் செவ்வாய்க்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057–ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனித் திங்கள் 10 ம்நாள்)

**<u>குற்றவியல் மேல்முறையீடு எண்.262/2022</u>**

(CNR No.TNED01-006117-2022)

| | | | |
|---|---|---|---|
| 1. | எந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | : | நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு. |
| 2. | விசாரணை நீதிமன்றத்தின் வழக்கு எண். | : | சுருக்க விசாரணை வழக்கு எண்.516/2019 |
| 3. | குற்றவியல் மேல்முறையீட்டு எண். | : | குற்றவியல் மேல்முறையீட்டு எண். 262/2022 |
| 4. | மேல்முறையீட்டாளர்/எதிரி பெயர், விலாசம். | : | ஆர்.தேவராஜ் (வயது 47),<br>த/பெ.ராமன்,<br>உரிமையாளர்<br>ஸ்ரீநிதி டெம்போ ரெகுலர் சர்வீஸ்,<br>ஐய்யப்பள்ளி,<br>கொங்கம்பாளையம் (வழி),<br>கங்காபுரம் (அஞ்சல்),<br>ஈரோடு. |
| 5. | எதிர்மேல்முறையீட்டாளர்/<br>புகார்தாரர் பெயர், விலாசம் | : | எஸ்.சுந்தர்ராஜ் (வயது 57),<br>த/பெ.செல்லப்பன்,<br>69/2, பாரதி நகர்,<br>சின்னியம்பாளையம்,<br>ஈரோடு-638 002. |
| 6. | விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு விவரம் | : | எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப் பிரிவு 138 ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என முடிவு செய்து, எதிரிக்கு மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப் பிரிவு 138 ன்கீழான குற்றத்திற்கு 3 மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனையும் இழப்பீடாக காசோலைத் தொகை ரூ.2,00,000/-ஐ வழங்க வேண்டு -மென்றும், தவறும் பட்சத்தில் மேலும் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையும் |

| | | | |
|---|---|---|---|
| | | | விதித்து கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன்படி தீர்ப்பு. |
| 7. | மேல்முறையீட்டின் தீர்ப்பு விவரம். | : | **முடிவாக,** இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து ஈரோடு, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.1, நீதிமன்றம் சுருக்க விசாரணை வழக்கு எண்.516/2019 ல் 18.11.2022 ம் தேதியில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தண்டனையை உறுதி செய்தும், மேல்முறையீட்டாளர்/எதிரி சிறைத் தண்டனையை அனுபவிக்க உரிய நடவடிக்கையை விசாரணை நீதிமன்றம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்திரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

| | |
|---|---|
| மேல்முறையீடு தாக்கல் செய்த நாள் | 05.12.2012 |
| கோப்பில் எடுக்கப்பட்ட நாள் | 08.12.2022 |
| நீதிமன்றத்தில் ஆஜராக அறிவிப்பு கொடுக்கப்பட்ட நாள் | 02.01.2023 |
| வாதுரை நாள் | 10.03.2026 |
| தீர்ப்புரை நாள் | 24.03.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக 10.03.2026 ம்தேதி விசாரணைக்கு வந்தபோது, மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் திரு.ஆர்.ஜெகதீஷ்வரன், வழக்கறிஞர் அவர்களும், எதிர்மேல்முறையீட்டாளர்/ புகார்தாரர் தரப்பில் திரு.வி.சங்கர், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், எதிர்மேல்முறை -யீட்டாளர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மேல்முறையீட்டாளர் தரப்பு வாதுரைக்காக போதிய அவகாசம் வழங்கப்பட்டும் வாதுரைக்காததால் மேல்முறையீட்டாளர் தரப்பு வாதுரை முடிக்கப்பட்டும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை, மேல்முறையீடு மற்றும் வழக்கு கோப்புக்களை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:-

## தீர்ப்புரை

கடந்த 18.11.2022 ம்தேதி ஈரோடு, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.1 ல் சுருக்க வழக்கு எண்.516/2019 ல் வழங்கப்பட்ட தண்டனை தீர்ப்பினால் அதிருப்தியுற்று எதிரி இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

3. **விசாரணை நீதிமன்றத்தின் வழக்கு விவரம்:-**

கடந்த 16.07.2019 ம்தேதி புகார்தாரரிடம் எதிரி தன்னுடைய அவசர செலவுகளுக்காக வேண்டி ரூ.2,00,000/-ஐ கடனாகப் பெற்றுக் கொண்டு மேற்படி கடனை ஆண்டொன்றுக்கு 18% வட்டி சேர்த்து கொடுப்பதாக ஒப்புக் கொண்டு வட்டி முன்பணமாக ரூ.3,000/-ஐ செலுத்திவிட்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக எதிரி கணக்கு வைத்துள்ள ஆக்சிஸ் பேங்க், பெரியசேமூர் கிளையின் 16.08.2019 பின் தேதியிட்ட காசோலை எண்.122474 ஐ ரூ.2,00,000/-க்கு கொடுத்ததாகவும், எதிரி கேட்டுக் கொண்டதன்பேரில் மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கி கணக்கு உள்ள கரூர் வைஸ்யா பேங்க், சின்னியம்பாளையம் கிளையில் 16.08.2019 ம்தேதி வசூலுக்காக தாக்கல் செய்தபோது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்துடன் 17.08.2019 ம் தேதி திருப்பப்பட்டதாகவும், மேற்படி விவரத்தை எதிரிக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், எதிரி புகார்தாரரை மோசடி செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலேயே காசோலையை கொடுத்து ஏமாற்றியுள்ளதாகவும், எனவே, புகார்தாரர் கடந்த 29.08.2019 ம்தேதி எதிரிக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பை அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பு எதிரியால் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்று திருப்பப்பட்டதாகவும், அதன் பின்னிட்டும் எதிரி காசோலையில் கண்டுள்ள தொகையை செலுத்தாமல் இருந்து வந்துள்ளதாகவும், எனவே, எதிரி அவரது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரிந்தும் வேண்டுமென்றே புகார்தாரரை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் மேற்படி காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138 மற்றும் 142 ன்கீழ் குற்றம் புரிந்துள்ளதால் எதிரியை விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுத்து காசோலைக்குண்டான தொகையை திரும்ப செலுத்த உத்தரவிட வேண்டி கு.வி.மு.ச. பிரிவு 357 ன்கீழ் இழப்பீடு வழங்கக் கோரியும் புகார்தாரரால் விசாரணை நீதிமன்றத்தின் முன் இந்த தனி பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** பின்னர் நீதித்துறை நடுவர் இவ்வழக்கு புகார்தாரரின் சத்திய பிரமாண வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, பரிசீலித்து கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இவ்வழக்கில் ஆஜரான பின்பு கு.வி.மு.ச.பிரிவு

204(3)ன்கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி கு.வி.மு.ச.பிரிவு 251 ன்கீழ் குற்றம் பற்றி வினவியபோது எதிரி பொய் வழக்கு என குற்றத்தை மறுத்துள்ளார்.

5. எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138 ன்கீழான குற்றத்தை மறுத்ததினால், விசாரணை நீதிமன்றம் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது. புகார்தாரர் தரப்பில், பு.த.சா.1 விசாரிக்கப்பட்டு, பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.13 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் எதுவும் முன்னிடப்படப்படவில்லை.

6. முழு விசாரணைக்கு பிறகு, ஈரோடு நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.1 நீதிமன்றமானது, மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881, பிரிவு 138 ன்கீழ் எதிரி குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப் பிரிவு 138 ன்கீழான குற்றத்திற்கு 3 மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனையும், இழப்பீடாக காசோலைத் தொகை ரூ.2,00,000/-ஐ வழங்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் மேலும் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்து கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன்கீழ் தீர்ப்பளித்துள்ளது. மேற்படி தீர்ப்பு மற்றும் தண்டனையில் குறைவுற்ற எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

7. <u>மேல்முறையீட்டின் சுருக்கம் :-</u>

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும் சட்டத்தின்படியும், நியாயத்தின்படியும் நிலைக்கத்தக்கதல்ல, வழக்குச் சங்கதிகளுக்கு எதிரானது. விசாரணை நீதிமன்றம் தவறான கண்ணோட்டத்தின் அடிப்படையில் எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன்கீழ் குற்றவாளி என்று தீர்மானித்துள்ளது. எதிரிக்கு எதிராக புகார்தாரரால் அவருடைய வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறியுள்ளது. புகார்தாரரின் சாட்சிய சான்றாவணங்களில் உள்ள குறைகளை சரிவர பரிசீலனை செய்யாமல் தவறான முன்னனுமானம் மற்றும் அனுமானம் செய்துள்ளது. விசாரணை நீதிமன்றம், புகார்தாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை மட்டும் ஏற்றுக் கொண்டுள்ளது தவறானது. புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே நடந்ததாகச் சொல்லப்படும் பணப் பரிமாற்றம் குறித்து புகார்தாரர் தரப்பில் சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட -வில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறியுள்ளது. புகார்தாரருக்கு கடன் கொடுக்கும் அளவுக்கு போதிய வசதி வாய்ப்பு இல்லை. எனவே,

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், விசாரணை நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்பை ரத்து செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டும்.

8. <u>இந்தக் குற்றவியல் மேல்முறையீட்டில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள்:-</u>

| | |
|---|---|
| 1 | புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச் சட்டப் பிரிவு 138 ன்கீழ் குறிப்பிடப் -பட்டுள்ள விதிகளைப் பின்பற்றியுள்ளரா? |
| 2 | ஈரோடு, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் எண்.1 நீதிமன்றம் சுருக்க வழக்க எண்.516/2019 ல் 18.11.2022 தேதியில் பிறப்பித்த தீர்ப்பும், தண்டனையும் ரத்து செய்யத்தக்கதா? |

9. இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் தீர்வு காண்பதற்கு வசதியாக, விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களை புகார்வாதி மற்றும் எதிரி என்று அழைக்கப்பட்டது போன்றே இந்த மேல்முறையீட்டிலும் அழைக்கப்படுகின்றனர்.

10. <u>பிரச்சினை எண்.1 மற்றும் 2:-</u>

விசாரணை நீதிமன்றம், இருதரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138 பிரிவின்கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு 3 மாதம் மெய்க்காவல் சிறைத் தண்டனையும், இழப்பீடாக காசோலைத் தொகை ரூ.2,00,000/-ஐ வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் மேலும் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்து கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன்கீழ் தீர்ப்பளித்துள்ளது.

11. மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பு வாதுரைக்காக போதிய வாய்ப்பளிக்கப் -பட்டும் எதிரி தரப்பில் எதிரியோ வழக்கறிஞரோ நீதிமன்றத்தில் ஆஜராகி அவர்களது தரப்பு வாதத்தை எடுத்துரைக்கவில்லை என்பதால் ஆவணங்கள் மற்றம் தகுதியின் அடிப்படையில் இம்மேல்முறையீடு பரிசீலனை செய்யப்படுகிறது.

12. எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில், எதிரி புகார்தாரரிடமிருந்து ரூ.2,00,000/-ஐ தன்னுடைய அவசர செலவுகளுக்காக பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி கடனுக்கு ஆதரவாக எதிரி கணக்கு வைத்துள்ள வங்கியின் காசோலையில் கையெழுத்திட்டுக் கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை புகார்வாதியின் வங்கி கணக்கில் செலுத்தியபோது எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்துடன் திருப்பப்பட்டதாகவும் அதனைக்

குறித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும் அது திருப்பப்பட்டதாகவும், அதனால் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், விசாரணை நீதிமன்றத்தில் புகார்வாதியை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தில் மேற்படி காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையதல்ல என்றும் ஆனால் காசோலை எதிரியுடையது என்று சொல்லியிருப்பதாகவும், மேலும் எதிரியின் காசோலையை ஒரு நல்லசிவம் என்பவர் திருடி புகார்வாதியிடம் கொடுத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை என்றும், அவ்வாறு எதிரியின் காசோலை திருடு போய் விட்டது குறித்து காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், வங்கியில் ஸ்டாப் பேமெண்ட் கொடுக்கவில்லை என்றும் காசோலைக்குரிய மறு பயன் ஏற்பட்டுள்ளது என்ற காசோலையின் நிறைவேற்றுகை குறித்து புகார்வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், மேற்படி காசோலையில் கண்டுள்ள தொகையை எதிரி புகார்வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், எனவே, இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் விசாரணை நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்பு உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டுள்ளது.

**13.** புகார்தாரர் பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதில் அவர் தன் சாட்சியத்தில், 16.07.2019 ம்தேதி எதிரி தன்னுடைய அவசர செலவுகளுக்காக வேண்டி ரூ.2,00,000/-ஐ கடனாகப் பெற்றுக் கொண்டு எதிரி கணக்கு வைத்துள்ள ஆக்சிஸ் பேங்க், பெரியசேமூர் கிளையின் 16.08.2019 பின் தேதியிட்ட காசோலை எண்.122474 ஐ ரூ.2,00,000/-க்கு கொடுத்ததாகவும், எதிரி கேட்டுக் கொண்டதன்பேரில் மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கி கணக்கு உள்ள கரூர் வைஸ்யா பேங்க், சின்னியம்பாளையம் கிளையில் 16.08.2019 ம்தேதி வசூலுக்காக தாக்கல் செய்தபோது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்துடன் 17.08.2019 ம்தேதி திருப்பப்பட்டதாகவும், அதனைக் குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், எதிரி புகார்தாரரை மோசடி செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலேயே காசோலையை கொடுத்து ஏமாற்றியுள்ளதால் புகார்தாரர் 29.08.2019 ம்தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பு எதிரியால் பெற்றுக் கொள்ளாமல் திருப்பப்பட்டுவிட்டதாகவும், எதிரி தன்னுடைய வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று தெரிந்தும் வேண்டுமென்றே புகார்தாரரை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் காசோலையை கொடுத்து மோசடி செய்துள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138 மற்றும் 142 ன்கீழ் குற்றம்

புரிந்துள்ளதாகவும் கூறியுள்ளார். எதிரி தரப்பில் புகார்வாதியை குறுக்கு விசாரணை செய்ததில், புகார்வாதிக்கு ரூ.2 லட்சம் கடன் கொடுக்கும் அளவுக்கு போதுமான வருமானம் இல்லை என்றும், புகார்வாதியை எதிரிக்கு யார் என்றே தெரியாது என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதனைப் பொருத்து புகார்வாதி தன் சாட்சியத்தில், தான் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் மற்றும் முத்திரைத் தாள்களை விற்பனை செய்து வருமானம் ஈட்டுவதாகவும், எதிரி டெம்போ வைத்து காடா பீஸ் டெலிவரி செய்து வருவதாகவும், அதனடிப்படையில் பழக்கமானவர் என்றும் கூறியுள்ளார். எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்கையில், எதிரி மாதத்திற்கு ஒரு முறை தேங்காய் ஏற்றி எதிரியின் வண்டியில் வந்ததாகவும், நம்பிக்கையின் அடிப்படையில் வண்டியை புகார்தாரரிடம் விட்டுவிட்டு எதிரி செல்வார் என்றும் தூண்டுரை கேள்வி கேட்கப்பட்டுள்ளதை புகார்வாதி ஒப்புக் கொண்டுள்ளார். எனவே, புகார்தாரருக்கு எதிரி தெரிந்த நபர் என்பதும் எதிரிக்கு புகார்தாரர் தெரியாத நபர் அல்ல என்பதும் தெரிய வருகிறது. புகார்வாதிக்கு கடன் கொடுக்கும் அளவுக்கு போதுமான வருமானம் இருந்துள்ளது என்பதைக் காட்டும் ஆவணங்களாக பு.த.சா.ஆ.7 முதல் 12 வரையான ஆவணங்களாக பாகப் பிரிவினை பத்திரம், கிரயப் பத்திரம், 'அ' பதிவேடு ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. புகார்வாதிக்கு விவசாயத்தின் மூலம் வருமானம் வருகிறது என்பதும், கடன் கொடுக்கும் அளவுக்கு போதுமான வருமானம் உள்ளது என்பது தெரிய வருகிறது.

**14.** எதிரி தரப்பில் எதிரியின் உறவினரான நல்லசிவம் என்பவர் எதிரியின் காசோலையை திருடி எடுத்துச் சென்று புகார்வாதியிடம் கொடுத்து புகார்வாதி மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பொருத்து எதிரி தரப்பில் எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. எதிரியின் காசோலை திருடு போய்விட்டதாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை. அதேபோல் வங்கியில் ஸ்டாப் பேமெண்ட் கொடுக்கப்படவில்லை. எதிரி தரப்பில் சொல்லப்படும் சங்கதிகளைப் பொறுத்து புகார்வாதியின் வழக்கை மறுதலித்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி நல்லசிவம் என்பவர் எந்த தேதி, மாதம், வருடத்தில் எதிரியின் வீட்டிற்கு வந்து காசோலையை எடுத்துச் சென்றார் என்பது குறித்தோ நல்லசிவத்திற்கும் எதிரிக்கும் இடையேயான தொடர்பைக் குறித்தோ எதிரி தரப்பில் சொல்லப்படவில்லை. எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன்கீழான

கேள்வி வினவியபோது எதிரி காசோலை தன்னுடையது என்றும், காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என்றும் மறுத்துள்ளபோதும், மேற்படி காசோகையை கையெழுத்து நிபுணபரின் ஆய்வுக்கு அனுப்ப எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவரால் ஒப்புக் கொள்ளப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணத்தைக் கொண்டும் இந்நீதிமன்றம் ஒப்பீடு செய்ய எதிரியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எதிரி தரப்பில் எதிரியின் காசோலையை நல்லசிவம் என்பவர் திருடி எடுத்துச் சென்றுவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளதில் மேற்படி காசோலை எதிரியால் கையெழுத்திடப்பட்ட காசோலையா? கையெழுத்திடப்படாத வெற்றுக் காசோலையா? என்பதைக் குறித்து சொல்லப்படவில்லை. வழக்கிற்காக எதிரி மேற்படி காசோலையில் உள்ள கையெழுத்தை மறுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

15. மேல்முறையீட்டுக்கான காரணங்களாக எதிரி தரப்பில் விசாரணை நீதிமன்றம் சாட்சிய சான்றாவணங்களை சரிவர பரிசீலனை செய்யவில்லை என்றும், புகார்வாதிக்கும் எதிரிக்கும் இடையே பணப் பரிமாற்றம் நடந்ததா? என்பதைப் பொருத்து பரிசீலனை செய்யவில்லை என்றும் சொல்லப்பட்டிருப்பினும் விசாரணை நீதிமன்றத்தில் பு.த.சா.ஆ.1 காசோலை சட்டப்படியான மறுபயனுக்கு ஏற்பட்டது என்று புகார்வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி தொகையை எதிரி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார். எனவே, விசாரணை நீதிமன்றத்தில் புகார்வாதி தரப்பு சாட்சியத்தின்படி எதிரி புகார்வாதியிடமிருந்து பு.த.சா.ஆ.1 காசோலையில் கண்டுள்ள தொகையை பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக பு.த.சா.ஆ.1 காசோலையைக் கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி காசோலையை புகார்வாதி தனது வங்கிக் கணக்கில் செலுத்தியபோது எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லை என்று காசோலை திருப்பட்டுள்ளது என்பதும் அதனைக் குறித்து எதிரிக்கு புகார்வாதியால் சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டு அதனை எதிரி பெற்றுக் கொள்ளாமல் தவிர்த்து பணமோ பதிலோ கொடுக்கவில்லை என்பதும், பு.த.சா.ஆ.1 காசோலைக்கு சட்டப்படியான மறுபயன் ஏற்பட்டுள்ளது என்பதும், புகார்வாதி தரப்பில் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 139 ன்கீழான நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது என்பதும் புகார்வாதி தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள தண்டனைத் தீர்ப்பை ரத்து செய்ய அடிப்படை முகாந்திரம் இல்லை என்பதால், இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்வதென இந்நீதிமன்றம் முடிவு செய்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது.

**முடிவாக**, இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து ஈரோடு, நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம் எண்.1 நீதிமன்றம், சுருக்க விசாரணை வழக்கு எண்.516/2019 ல் 18.11.2022 தேதியில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தண்டனையை உறுதி செய்தும், மேல்முறையீட்டாளர் / எதிரி சிறைத் தண்டனையை அனுபவிக்க உரிய நடவடிக்கையை விசாரணை நீதிமன்றம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்திரவிட்டும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் வரி வடிவில் எடுத்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 24 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.24 19:18:11 +0530

முதல் கூடுதல் அமர்வு நீதிபதி,
ஈரோடு

<u>நகல்:-</u>நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம் எண்.1,
ஈரோடு.

<u>அசல்/வரைவு தீர்ப்புரை</u>
<u>கு.மே.வ.எண்.262/2022</u>
நாள் 24.03.2026
மு.கூ.அ.நீ.ம., ஈரோடு.